நாள்: 16.05.2021

செ.வெ. எண்: 075

செய்திக்குறிப்பு

17.5.2021 அன்று இந்திய அரசின் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் மாநிலங்களின் கல்வித்துறை செயலாளர்களுடன் காணொளி கூட்டம் வாயிலாக கோவிட் நோய்த்தொற்று காலத்தில் கல்விஅமைப்பு மேலாண்மை,பள்ளிகளில் இணைய வழி கல்வி தொடர்வதற்கான வழிமுறைகள், புதிய தேசிய கல்விக்கொள்கையை நடைமுறைப்படுத்ததிலின் நிலை போன்றவை குறித்து கலந்துரையாட உள்ளதாக மத்திய அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு கல்வித்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு மத்திய கல்வி அமைச்சர் அவர்களுக்கு இன்று (15.5.2021) எழுதியுள்ள கடிதத்தில் இக்கலந்துரையாடல் கூட்டத்தை தமிழ்நாடு அரசின் கல்வித்துறை அமைச்சர் மற்றும் உயரதிகரிகளுடன் நடத்துவதே ஏற்புடையதாக இருக்கும் எனவும் அக்கூட்டத்தில் மாநில அரசின் சார்பாக மிகமுக்கியமான பொருண்மைகளான புதிய தேசிய கல்விக்கொள்கை நடைமுறைப்படுத்ததிலின் நிலை போன்றவற்றின் மீதான கருத்துக்களையும், பரிந்துரைகளையும் தாம் தெரிவிக்க தயாராக உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9